



**17.08.2023**

# 10. நிலைத்திருக்கும் அன்பில் வேரூன்றிய இருதயம் வேண்டும்!



“தெய்வ அன்பின் வல்லமையை” நாம் ஒரு சேனையைப் போன்ற ஐக்கியத்தில் இசைந்திருக்கவும், நம் செய்கையாவிலும் நம்மை சோர்ந்து போகாதிருக்கவும் வல்லமைக்கொண்டது! எனவேதான் **அன்பிற்கு ஓயாத எதிர்ப்பு அலைமோதுகிறது!** நாம் அன்பை இழந்து, சத்தமிடுகிற வெண்கலம்போலவும் ஓசையிடுகிற கைத்தாளம் போலவும் மாறுவதற்கே இந்த எதிர்ப்பு! இதினாலேதான், அன்பின் ஜீவியஞ்செய்ய விரும்புகிறவர்களாகிய நாம், தொடர்ந்து நம்மை பரிசோதித்துச் சுத்திகரிக்கும் தேவ ஆவியானவரைத் தேடும்படி நெருக்கி ஏவப்படுகிறோம்!

இவ்வாறு, நம்மிடமுள்ள அன்பை சத்துரு எதிர்ப்பதற்கு இன்னொரு காரணமுண்டு, அதுஎன்னவென்றால்: “நீங்கள் அன்பில் நிறைந்திருக்கும்போது, பிறரிடம் மாறாத அன்புடையவர்களாய் இருப்பீர்கள். ஆனால், உங்கள் உள்ளத்தில் “சிறிதளவு அன்பற்ற தன்மையை” சத்துரு போட்டுவிட்டால், உங்கள் சம்பந்தப்பட்டவர்களின் வாழ்விலும் ‘அதே அன்பற்ற தன்மை’ பரவிவிடும்! இந்த யுக்தியைத்தான் சத்துரு பயன்படுத்துகிறான்! சத்துருவின் தந்திரம் அறிந்து, நம்முடைய இருதயத்தில் எப்போதும் அன்பு நிறைந்து வழிந்தோட, பரிசுத்தாவியின் அருள்மாரியை இடைவிடாது தேடி, அன்பில் வேரூன்றி வளர்வோமாக!

**– ரத்னம்**